


**02.11.2020**

## 10. 'வறட்சி காலங்களில்' கனிதரும் கிறிஸ்தவர்கள்!

நம் மேய்ப்பனாய் இருக்கும் ஆண்டவர் **'நித்தமும்'** (Daily) நம்மை அவருடைய சித்தப்படி நடத்தவே விரும்புகிறார்!(ஏசா.58:11). நம் ஆண்டவர் இயேசுவும், ஒவ்வொருநாள் 'அதிகாலையும்' தன் செவிகளை தன் பிதாவிற்கு திறந்து 'அனுதினமும்' தன் பிதாவின் சித்தம் செய்தார்! (ஏசாயா 50:4,5).

இவ்வாறு, தினசரி (நித்தமும்) நம்மை நடத்துகிறபடியால், 'மகா வறட்சியான காலங்கள்' சம்பவித்த சூழ்நிலைகளில் 'நம் ஜீவிய தோட்டத்தில்' அவரே நமது ஊற்றுக்கண்ணாய் 'நீர்ப்பாச்சுவார்!'. அந்த நீரூற்று வற்றுவதேயில்லை! (ஏசாயா 58:11). **இவ்வாறு, கர்த்தரால் நித்தமும் நடத்தப்படுகிறவர்களே** 'நிலைத்திருந்து' மிகுந்த கனி கொடுத்து வாழ்வார்கள்! அவர்களே 'கிறிஸ்தவர்கள்!' (யோ.15:7,8).

**– ரத்னம்**